(பிற்பகல் 4·20)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. ஆனால் அதிகமாகப் பணம் தேவை என்று தான் பல மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, எங்கள் மாவட்டத்தில் கூட மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. அங்கே அது பற்றி நடவடிக்கை எடுப்பதாகக் கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்ற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது குறித்து அரசு என்ன கருதுகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து அரசுக்கு எந்த விதமான முறையீடுகளும் வரவில்லை.

Candidates allotted to the Board of Revenue (Land Revenue).

*157 *Q.* THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 16, on the floor of the Council on 16—12—1974—

(*a*) whether the Government are aware of the fact that some of the candidates recruited through Group IV Services during the year 1973 and allotted to the Board of Revenue (Land Revenue) during the years 1973 and 1974 by the Tamil Nadu Public Service Commission have been retrenched from service;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether the Government propose to re-employ them in the Board of Revenue (Land Revenue) or request the Tamil Nadu Public Service Commission to re-allot them elsewhere?

வருவாய் (நில வருவாய்) வாரியத்திற்கு ஒதுக்கீடு பெற்றவர்கள்.

திரு. செ. முத்துசாமி: 16—12—1974-ல் சட்டமன்ற மேலவையில் வினா எண் 16-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தொகுதி IV பணித் தேர்வுகள் மூலம் 1973-ல் நியமிக்கப்பட்டு, இக் கழகத்தால் 1973–74-ல் வருவாய் (நில வருவாய்) வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிலர் பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) வருவாய் வாரியத்தில் (நில வருவாய்) அவர்களை மீண்டும் பணியிலமர்த்த அல்லது அவர்களை மீண்டும் வேறெங்காவது பணியிலமர்த்துமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தைக் கேட்டுக் கொள்ள அரசு கருதியுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) மதுவிலக்கை மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்ததனால், சில பதவிகள் நீக்கப்பட்டன. இதனால் ஆட்குறைப்புச் செய்யவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

(உ) ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்கள் அனைவரும் வருவாய்த் துறை வாரிய அலுவலகத்தில் (நில வரிப்பிரிவில்) மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

Underground Drainage System in Madras City.

*158 *Q.* THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct an Underground Drainage System, with a view to prevent the flow of drainage water from several parts of the city into the Cooum River and Buckingham Canal, in Madras City; and

(*b*) if so, the present stage of the Scheme?

சென்னை நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரினுள் ஓடும் கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் ஆகியவைகளில், நகரின் பல பகுதிகளிலிருந்து வரும் சாக்கடை நீரைத் தடுக்கும் பொருட்டு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அத் திட்டம் எந்நிலையில் உள்ளது.